தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

PEER REVIEWED

Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 1, January 2026

# Performance center-based activity that engages children in kooththu Art

**Mr. Sundaralingam Chandrakumar*,**
*Senior Lecturer. Department of Fine Arts, Eastern University, Sri Lanka.*
*ORCiD: https://orcid.org/0000-0003-0774-9666, Email- chandrakumars@esn.ac.lk*
**Mr. Vinayakamoorthi Vikneswaran**.**
*Graduate in Drama and Theatre. Eastern University. Sri Lanka.*
*Email: vikneshvaran407@gmail.com*

**Corresponding Author** chandrakumars@esn.ac.lk

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 13, 2025
Revised
December 15, 2025
Accepted
December 20, 2025

**ABSTRACT**

Kooththu Theatre is a necessity of today. Kooththu Theatre is a festival where children, the elderly, men and women all come together to celebrate and enjoy. In the past, Kooththu was performed in every region. However, due to the modern mindset, people have become consumers and live as consumers, so the tradition of Kooththu has been abandoned in some places. Due to the losses caused by war, natural disasters, migration, and etc., in Sri Lanka, every person has forgotten themselves and their art and is moving unhealthy due to economic and competitive life. In order to strengthen human unity and health, it is necessary to revive and fully engage in open-air stage. The aim of the study is to create an opportunity for the young generation who are not involved in Kooththu in the village to participate. This study was carried out through Kooththu to create an environment for them to act freely and to educate through entertainment. During this activity, the children celebrated and enjoyed themselves without discrimination. They expressed their true thoughts. They understood themselves and the environment, gained knowledge and experience, and were trained physically and mentally to face challenges. The community united and expressed their opinions. The parents of the children were happy to see the children's talent directly. Their cooperation added strength to the children's creativity process and its recognition. In this, adults also participated enthusiastically and showed their abilities. This study focuses on its implementation, implementation method, and the change that occurred. It was conducted in the village of Kallady in Verungal, Sri Lanka, with the aim of involving children in the creativity process..

**Key words**: *Performance Center-based research, creativity, children, consumer society, collective life*

Journal Homepage: https://tamilmanam.in/journal/

This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# சிறுவர்களைக் கூத்துக் கலையில் ஈடுபடச்செய்யும் ஆற்றுகை மையச் செயற்பாடு

***திரு. சுந்தரலிங்கம் சந்திரகுமார்,** முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
****திரு. வினாயகமூர்த்தி விக்னேஸ்வரன்,** கலைப்பட்டதாரி, நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

**சுருக்கம் (Abstract)**

கூத்தரங்கு இன்றைய காலத்துக்குத் தேவையான ஒன்றாகும். கூத்தாற்றுகை சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருங்கிணைந்து கொண்டாடி மகிழும் வெளியாகும். முன்னைய காலத்தில் கூத்தாற்றுகை ஒவ்வொரு பிரதேசத்திலும் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. ஆனால்,

நவீனத்துவத்தின் சிந்தனைப் போக்கினால் மனிதர்கள் நுகர்வுகளாக ஆக்கப்பட்டு வாழ்வதனால், கூத்தின் ஆற்றுகை சில இடங்களில் விடுபட்டுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட போர், இயற்கை அனர்த்தம், இடம்பெயர்வு போன்றவற்றின் இழப்பினால் ஒவ்வொரு மனிதரும் தங்களையும், கலையினையும் மறந்து பொருளாதாரம், போட்டியான வாழ்க்கை என்றரீதியில் தனியன்களாக்கப்பட்டு ஆரோக்கியமற்று நகர்ந்து கொண்டிருக்கின்றனர். மானிட ஒற்றுமை, ஆரோக்கியம் என்பன வலுவடையத் திறந்தவெளி ஆற்றுகைக் கலைகள் மீளமீளச் செய்யப்படுவதும் அதில் முழுமையாக ஈடுபடுவதும் அவசியம். ஊரில் கூத்தாற்றுகையில் ஈடுபடாத இளம் தலைமுறையினருக்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் அவர்களைப் பங்குகொள்ள வைத்து ஆய்வின் நோக்கமாக உள்ளது. இது சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சூழலை அமைத்துக் கொடுக்கவும், மகிழ்வூட்டல் ஊடாக அறிவூட்டல் செய்வதற்கும் ஆற்றுகையூடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டினை முன்னெடுத்தபோது, சிறுவர்கள் பாகுபாடின்றி ஒன்றுகூடிக் கொண்டாடி மகிழ்ந்தனர். தங்களின் உண்மையான எண்ணங்களை வெளிப்படுத்தினர். இவர்கள் தங்களையும், சுற்றுச் சூழலையும் புரிந்து அறிவையும், அனுபவத்தையும் பெற்று சவால்களை எதிர்கொள்ள உடல், உள ரீதியாகப் பயிற்றப்பட்டனர். சமூகம் ஒருங்கிணைந்து அபிப்பிராயங்களைக் கூறி பங்களிப்புக்களை வழங்கினார். சிறுவர்களின் பெற்றோர் பிள்ளைகளின் திறமையினை நேரடியாகப் பார்த்து மகிழ்ந்தனர். தங்களின் ஒத்துழைப்பைச் சிறுவர் கூத்தாற்றுகைச் செயற்பாட்டிற்கும், அதன் அங்கீகாரத்திற்கும் பலம் சேர்த்தனர். இதில், பெரியவர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டுத் தம் ஆற்றலை வெளிப்படுத்தினர். இதன் நடைமுறை, செயற்படுத்திய முறை, ஏற்பட்ட மாற்றம் என்பவற்றினை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இது சிறுவர்கள் ஆற்றுகைச் செயற்பாட்டில் பங்குபற்றும் நோக்கில் இலங்கை வெருகலில் உள்ள கல்லடி எனும் கிராமத்தில் செய்யப்பட்டது.

**திறவுச் சொற்கள்**: ஆற்றுகை மைய ஆய்வு, கூத்தரங்கு, சிறுவர்கள், நுகர்வுச் சமூகம், கூட்டு வாழ்க்கை.

**அறிமுகம்**

ஈழத்தமிழர் பண்பாட்டிலே பாரம்பரிய அரங்குகளில் ஒன்றான கூத்து மகிழ்வுடனும் அழகியலுடனும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. பாரம்பரியக் கூத்துக்கள் அந்த சமூகத்தின் பண்பாட்டுத் தளத்தில் முன்னெடுக்கப்படுவதாக உள்ளது. தமிழர்கள் மத்தியில் பயில்நிலையில் உள்ள பாரம்பரியக் கூத்துக்கள் மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் கொடுத்து, கொண்டாடி மகிழ்வாக வாழ்வதற்கான சாதனமாகவும் உள்ளது. இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் தொகுதியில் வெருகல் பிரதேச நிருவாகப் பிரிவில் இருபத்தைந்து கிராமங்கள் காணப்படுகின்றன. பாரம்பரியக் கலையுடன் இணைந்த செயற்பாடானது வெருகலில் கல்லடி, வாழைத்தோட்டம், புன்னையடி, இலங்கைத்துறை முகத்துவாரம், ஈச்சிலம்பற்று ஆகிய கிராமங்களில் இன்றும் ஓரளவு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. இப்பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் அனைத்துக் கிராமங்களிலும் மக்கள் விரும்பி பொழுதுபோக்கு கலையாகப் பாரம்பரியக் கூத்துக்களை வைத்திருந்தனர். அவற்றுள், வசந்தன்கூத்து, கோலாட்டம், கும்மி, கரகம் போன்ற கலைமரபுகள் குறிப்பிடத்தக்கன. இவ்வாறான பாரம்பரிய ஆற்றுகைச்

செயற்பாடுகளுக்கு அன்றைய காலச்சூழல் பொருத்தப்பாடுடையதாக அமைந்தது. இதனால், மட்டக்களப்பு மாவட்டத்தில் கூத்துக்குப் பெயர்பெற்ற கன்னங்குடா, மாவடிஓடை, வாகரை, கதிரவெளி போன்ற கிராமங்களில் வாழ்ந்த அண்ணாவிமார்கள் வெருகல் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்கு அழைக்கப்பட்டு கூத்துக்களைப் பழக்கினர். இதன்போது இப்பிரதேசத்தில் காணப்பட்ட இளைஞர்கள், பெரியவர்கள் ஈடுபட்டனர். இதனால் கூத்தர்கள், அண்ணாவிமார் எனப் பல கலைஞர்கள் உருவாகி பல்வேறு கூத்துக்களை ஆடினர். உலகமயமாக்கலும் நவீனகால சிந்தனைப் போக்கும் பாரம்பரிய ஆற்றுகையினை முழுமையாகக் கொண்டுசெல்வதற்கு தடையாகக் காணப்படுகின்றன. அத்துடன் யுத்தம், இயற்கையனர்த்தம் போன்ற அழிவுகளால் இச்சமூகத்தின் மத்தியில் பாரம்பரிய கூத்தாற்றுகை ஒரு சில கிராமங்களைத் தவிர ஏனைய கிராமங்களில் நிகழ்த்தப் படவில்லை. இதனால், இப்பிரதேச மக்கள் மத்தியில் பிரிவினைகள் ஏற்பட்டு தனியன்களாகவும், சாதி, மத ரீதியில் முரண்பாடுகள் ஏற்பட்டும் வந்தன. சிறுவர்கள் தங்களையும் தாங்கள் வாழுகின்ற சூழலையும், தமது சமூகத்தினரையும் விளங்கிக்கொள்ளாது வாழ்வதோடு, பாரம்பரியப் பண்பாடுகளையும் மறந்து வருகின்றனர். இதன் நிமிர்த்தம் இன்றைய கால சிறுவர்கள் மத்தியில் இளவயது திருமணம், தற்கொலை, சிறுவர் துஷ்ப்பிரயோகம் போன்ற பிரச்சினைகளுக்கு வெளி வருகின்றன.

பாரம்பரியக் கூத்துக்கலை என்பது இன்றைய காலச்சூழலில் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் தேவையானவையாகும். வெருகல் பிரதேசத்தில் பாரம்பரியமாக கூத்தாற்றுகையில் பங்குபற்றி வந்த சமூகத்தினர் ஏன்? மூன்று தசாப்த காலமாக ஈடுபடவில்லை என்பதை உணர்ந்து இன்றைய சிறுவர்களைக் கொண்டு அதனை முன்னெடுக்கும் நோக்கில் வெருகல் கல்லடிக் கிராமத்தில் பாரம்பரிக்கூத்தை செயற்பாட்டு ரீதியில் (ஆற்றுகை நிலையில்) முன்னெடுக்கும் வகையில் 'வனராணி வடமோடி சிறுவர் கூத்தினை' மையப்படுத்திய ஆற்றுகை மைய ஆய்வினை வெருகல் கல்லடி கிராமத்தில் காணப்படும் சிறுவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் சிறுவர்கள் மத்தியில் விருப்பத்தை ஏற்படுத்தி ஈடுபாட்டைக் கொண்டுவந்து அதனை வலுப்படுத்திக் கொண்டாடி மகிழ்வதனூடாக எதிர்காலத்தில் திரும்பவும் அதனை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்துவதுடன் கூத்தாடிய பழைய கலைஞர்கள் சிறுவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அவர்களும் ஆட வேண்டும் எனும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகுவார்கள். மனிதர்களின் நுகர்வுச் செயற்பாட்டை உடைத்து வளர்வதற்கு இவ்வாறு மீளக் கூத்தாடுவது துணைபுரியும். இதனால், இளம் சிறுவர்களைச் செயற்பாட்டாளர்களாகவும், உடல், உள ஆரோக்கியம் உடையவர்களாகவும் மாற்றி எதிர்காலத்தில் பாரம்பரியக் கூத்தாற்றுகையும் அதன் சமூகம்சார் ஒற்றுமையையும் வலுப்படுத்த முடியும். கூத்தில் அனுபவம் வாய்ந்த அண்ணாவியார், முதியவர், ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வின் நோக்கம் சிறுவர்களைக் கூத்தில் இணைப்பதற்கு ஆற்றுகை மைய ஆய்வு துணைபுரியும் முறையை வெளிக்கொணர்தல். ஆய்வுப் பிரச்சினை சிறுவர்கள் சமகால அதிதொழில்நுட்ப நெருக்கடிச்

சூழலில் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்வதால் உடல், உளத் தாக்கம் ஏற்படுகின்றது. இதற்கு கூத்து ஆற்றுகை முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வில் பண்புசார் வடிவமைப்பில் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. ஆய்வுக்கான கருவியாக கள ஆய்வு, அவதானம், உற்றுநோக்கல், பங்குகொள்ளல், பகுப்பாய்வு செய்தல் இடம்பெறுகின்றது. மேலும், ஆற்றுகை மையச் செயற்பாடும் முக்கிய தகவல் பெறும் கருவியாகும். இதற்காக தொடர்ச்சியாக மூன்று மாதம் ஆற்றுகை ஊடாக ஈடுபட்டு செய்தலின் மையம்நின்று அண்ணாவியாரை வேறு ஊரில் இருந்து அழைத்து வந்து சிறுவர்களுக்குக் கூத்துப் பயிற்றுவித்து அதன்மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. ஆய்வு மாதிரியாகக் கூத்து ஆடப்படாது விடுபட்ட கல்லடி எனும் கிராமத்தில் ஒரு சிறுவர் விரும்பும் கதையைக் கொண்டு பயிற்றுவித்தல். இது ஊரில் கூத்தை மீள ஆற்றுகை செய்ய வைப்பது முக்கிய மாதிரியாகும்.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டம் வடக்கே தென்னமரவாடி தொடக்கம் தெற்கே வெருகல் வரையும் மிக நீண்ட பிரதேசத்தை உள்ளடக்கியுள்ளது. இதன் வடக்கு எல்லையாக முல்லைத்தீவும் தெற்கு எல்லையாக மட்டக்களப்பும் கிழக்கு எல்லையாக நீண்டு பரந்த கடலும் மேற்கு எல்லையாக தமிழர்களோடு மிக நெருங்கிய தொடர்புடைய வரலாற்றுப் பழமை மிக்க பொலநறுவை, அனுராதபுர மாவட்டங்களையும் கொண்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 230 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டமைந்துள்ளது. இதிலே கொட்டியாரப்பற்றின் கிழக்கே வங்கக் கடலோரம் திருகோணமலையையும் மட்டக்களப்பையும் பிரிக்கும் மகாவலி கங்கைக்கு அருகே அமைந்ததே வெருகல் பிரதேசமாகும். இது 10 கிராமசேவகர் பிரிவுகளையும் 25 கிராமங்களையும் கொண்டமைந்துள்ளது (வெருகல் கலசம், 2016, ப. 60).

மகாவலி கங்கையின் ஒரு கிளை வெருகல் கங்கைக் கிளை ஆகும். இது வெருகலாம்பதி கோயிலைச் சுற்றி இருபுறங்களிலும் பரந்து செல்கின்றது. இதனை அண்டிய மலைப்பிரதேசமாகவும், கங்கையைச்சுற்றி 'வெருகு' எனப்படும் செடி முளைத்துக் காணப்படுவதாலும் வெருகல் எனக்கூறப்படுகிறது. வெருகல் என அழைக்கப்படும் வாக்கியம் இங்குள்ள ஒரு கல்வெட்டில் காணப்படுவதாக அறியமுடிகிறது. வெருகல் கங்கை அருகில் இதனோடு இணைந்த அருள்மிகு சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் அமைந்துள்ளமையால் வெருகலாம்பதி எனவும் அழைக்கப்படுகிறது.

வெருகல் பிரதேச மக்களின் பண்பாட்டின் வெளிப்பாட்டுத் தன்மையை இப்பிரதேசத்தில் காணலாம். இங்கு பண்டிகைகளோடு சிறப்புப் பெறும் சாக்கடி, கிளித்தட்டு, ஊஞ்சல், விழாக்கள், கும்மி, கரகம், கோலாட்டம், வசந்தன், வடமோடி, தென்மோடி கூத்துக்கள், சடங்கு நிகழ்வுகள் என நிகழும் தமிழர்

பாரம்பரியக் கலைமரபுகள் சிறப்புற்றுக் காணப்படுகின்றது (பாலசுகுமார், திருமலைநவம், சிவபாலன், 1994).

**வனராணி வடமோடி சிறுவர் கூத்திச் செயற்பாடும் அதன் ஆரம்பமும்**

கூத்தினை பழகுவதற்கு முன்னர் ஆரம்ப கட்ட செயற்பாடாக கூத்தினை எழுதியவரான ஏட்டண்ணாவியார் திரு.செ.சிவநாயகம் அவர்களை நேரடியாகச் சந்தித்து அவரிடம் இருந்து கூத்து எழுதியதன் நோக்கம், அதன் கதையமைப்பு, சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் கூத்தினுடைய ஆடல், பாடல் என்பன கொண்டு செல்லப்பட வேண்டியவை பற்றி ஆய்வாளர் மூலம் ஒரு தெளிவினைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் கூத்தரங்குடன் தொடர்புபட்ட ஆளுமைகளுடன் கந்துரையாடலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது (குழுநிலைக் கலந்துரையாடல், சிவநாயகம்.செ, ஞானசேகரம்.சி, முத்துலிங்கம்.த, 2019.08.06). இவற்றினுடாகக் கூத்தரங்கின் ஆரம்பச் செயற்பாடு தொடங்கப்பட்டது.

சிறுவர் கூத்தினைப் பழகுவதற்கென சிறுவர்கள் தேவையாக இருந்தனர். இதனால் வெருகல் கல்லடிக் கிராமத்தில் காணப்பட்ட சிறுவர்களை சந்தித்து அவர்களுடன் கூத்து, அதன் தேவை, அதன்மூலம் சிறுவர்கள் அடையும் பயன்கள் பற்றி ஆய்வாளரால் தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனை உள்வாங்கிய சிறுவர்கள் மறுநாள் ஆய்வாளரை சந்தித்ததோடு, அது தொடர்பான விடயங்களைத் தங்களுக்கு போதிக்கும்படி வேண்டிக் கொண்டனர். இதன் முதலாவது கட்ட செயற்பாடாக ஆய்வாளரால் சிறுவர்களுக்கு வனராணி சிறுவர் கூத்தின் கதையினைத் தெளிவாக ஏற்ற மொழியில் கூறினார். கதையினை உள்வாங்கி சிறுவர்கள் இன்னும் தங்களை ஆர்வப்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக சிறுவர்கள் ஆர்வத்துடன் வந்ததுடன் அவர்களுக்கு அரங்க விளையாட்டுக்கள், ஊரிலுள்ள பழைய கதைகள் எனப் பல சொல்லுவதுமென சிறுவர்களுக்கு இன்றைய காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளின் அவசியம் பற்றிய தெளிவுகள் கொடுக்கப்பட்டன.

**சிறுவர் கூத்தரங்கின் சட்டம் கொடுத்தல் நிகழ்வு**

கூத்தரங்கானது ஒரு தொடர் செயற்பாட்டின் மூலமாக நிகழ்த்தப்படுவதாகும். இச் செயற்பாட்டின் மூலமாக கூத்தர்களுக்கு சட்டம் கொடுத்தல் நிகழ்வு இடம்பெறும். சட்டம் கொடுத்தல் என்பது பாத்திர தெரிவினை குறிக்கின்றது. இது கூத்தர்களின் பாடும் திறன், தோற்றம் என்பவற்றினை கருத்திற் கொண்டு யார் யார் எப்பாத்திரம் ஏற்று ஆடுவது என்பதனை உணர்ந்து அண்ணாவியார் தெரிவு செய்வதாகும். களரியிலேயே சிறுவர்களை நிற்க வைத்து கட்டியக்காரன் பாத்திரம் தொடக்கம் அரச அதிகாரி பாத்திரம் வரை தெரிவு இடம்பெறும்.

கூத்தாற்றுகையின் சட்டம் கொடுத்தல் நிகழ்வானது 2019.08.12 திங்கட்கிழமை காலை 09 மணியளவில் பொறுப்பாசிரியரும், ஆய்வு மேற்பார்வையாளருமான சு.சந்திரகுமாரின் தலமையில் இடம்பெற்றது. வெருகல் கல்லடி கிராமத்தில் அமைந்துள்ள கூத்துப் பழகும் வீட்டு முன்றலில் அண்ணாவியர் சி.ஞானசேகரம், கொப்பி ஆசிரியர் த.முத்துலிங்கம் போன்றோரின் வழிகாட்டலினூடாக கூத்தாடுகின்ற களரியில் மடை வைத்து பின் தேவாரம், காப்பு விருத்தம் என்பன பாடப்பட்டு பூசைகள்

செய்யப்பட்டது. இதன் பின்னர் சட்டம் கொடுத்தல் நிகழ்வு இடம் பெற்றது. இவ்வேளை கூத்தாடும் சிறுவர்கள் அண்ணாவியரின் பாதங்களைத் தொட்டு வணங்கிய பின்னர் சட்டத்தைப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறு சமூகம் கூடி ஒன்றிணைந்த விழாவாகவும், பல்கலைக்கழகமும் சமூகமும் இணையும் செயற்பாடாகவும் இக்கூத்தின் சட்டம் கொடுத்தல் நிகழ்வு அமைந்திருந்தது.

**சிறுவர் கூத்தரங்கின் சதங்கை அணி விழா**

பாரம்பரிய கூத்தரங்கானது சமூகத்தை ஒன்றிணைத்து வாழவைக்கும் ஒரு சமுதாயம்சார் உயிரோட்டமான கலை விழாவாகும். கூத்தரங்கு கூத்தர்கள் தமது ஆற்றல்களையும், திறனையும் கொண்டாடி மகிழ்வதற்கான ஓர் இடமாகும். கூத்தரங்கில் சமுதாயம் முழுமையாக ஈடுபாடு கொள்வதால் அது சமுதாய நிலைப்பட்ட அரங்காக விளங்குகின்றது. இதனால் இது ஆடல், பாடல், ஒப்பனை முதலான அழகியலை மாத்திரம் கொண்டதல்ல. மாறாக சமுதாயம் பங்குகொண்டு வாழ்ந்து மகிழும் அரங்காக விளங்குகிறது. இதன் ஆற்றுகை அழகியல் கூத்து 'சமுதாய விழாவாக' காணப்படுவதாகும். அகஸ்தாபோலின் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கு உரையாடலை மையப்படுத்திய அழகியலை முன்னைக்கின்றது. அது ஜனநாயகம் நின்று சமத்துவத்தை வலுப்படுத்தும் தன்மை உடையது (Boal, 2006).

இவ்வாறான விழாவிலே சதங்கையணி காணப்படுகின்றது. முதலிலே சதங்கை அணிந்து கொண்டு நடப்பதற்கு கூத்தர் பயிற்சி பெற வேண்டும். கூத்து பழகுவதற்கு தொடங்கி மூன்று அல்லது நான்கு மாதங்களின் பின்னரே சதங்கையணி விழா இடம் பெறும். கூத்தில் ஆடல், பாடலில் கூத்தர் திறமையுடையவராகவும் தன்னுடைய கூத்தினை சிறப்பாக ஆடுவார் என்பதை அண்ணாவியர் உணர்ந்த பின்னரே சதங்கையினை கூத்தர் காலில் கட்டுவார். இதன்போது அண்ணாவியருக்கு கூத்தர் தட்சனை வழங்குதல் போன்ற முறையையும் காணலாம். இந்த விழாவில் கூத்தர்களின் உற்றார் உறவினர் என்று அனைவரும் விழாக்கோலம் பூண்ட விழாவாகவே சதங்கை அணிதல் விழா காட்சியளிக்கும்.

அத்துடன் சதங்கையணிந்து கூத்தர் ஆடும்போது மத்தள ஒலியும், சதங்கை ஒலியும் ஒன்றாக விழுகின்ற பட்சத்திலேதான் அக்கூத்தினுடைய நாதம் தெளிவான வகையில் பார்வையாளர் (சமூகம்) மத்தியில் சென்றடைந்து அவர்களுடைய உள்ளங்களை அதி விரைவாக கூத்தின் பக்கம் இழுத்தெடுப்பதைக் காணலாம். இங்குதான் கூத்தரின் ஆட்டம், அதன் அழகு என்பவற்றிற்கான உயிர் சதங்கை ஒலியினூடகச் சென்று மத்தள அடியின் தன்மையினைப் பெற்று தனித்துவம் பெறுகிறது.

**இக்கூத்து ஆற்றுகையின் அரங்கேற்ற விழா**

கூத்தாற்றுகையின் தொடர் செயற்பாட்டின் உச்சமாக அரங்கேற்ற விழா அமைகின்றது. இக்கூத்து பெறுபேற்றின் முழுமையான வெளிப்பாடாக 2019.08.31 அன்று சனிக்கிழமை இரவு 07 மணியளவில் கல்லடி பெரிய தெய்வ ஆலய பொதுச்சந்தியில் அரங்கேற்ற விழா கோலகலமாக இடம்பெற்றது.

சிறுவர்கள் தங்களது பாத்திரங்களுக்கு ஏற்றாற் போல் உடை அணிந்து, ஒப்பனை செய்திருந்த கூத்தர்கள் மிகுந்த உட்சாகத்துடன் தங்களுக்குரிய பாத்திரங்களது பாட்டுக்களையும், ஆட்டங்களையும்

மிகச் சிறப்பாக நிகழ்த்திச் சென்றனர். இவர்களது பாடல் பாடும் திறன், மத்தள அடிக்கேற்றவாறு ஆடும் விதம், பாடல்களுக்கான நடிப்பு என்பன பார்ப்பவர்களை கவரும் விதத்தில் அமைந்திருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளை நேரடியாகச் செய்வதனூடாக சிறுவர்கள் தமக்குள் மகிழ்ந்தனர். மேலும், தொடர்ந்து செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணங்களையும், உட்சாகங்களையும் பெற்றனர். தங்களுடைய திறமைகளைத் தாங்களே கண்டு வியப்படைகின்றனர். அத்துடன் மேடைக்கு வர சந்தர்ப்பம் கிடைக்காதவர்களும் இங்கு களரிக்குள் வந்து போவதாகவும், அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாகவும் கூத்தாற்றுகையின் அரங்கேற்ற விழா இடம் பெற்றது.

**சிறுவர் கூத்தரங்கின் வீட்டிற்கு வீடு ஆடும் நிகழ்வு**

கூத்தரங்கில் வீட்டிற்கு வீடு ஆடுதல் என்பது அரங்கேற்றம் முடிந்ததும் மறுநாள் காலை கூத்தர்களது வீட்டிலும், ஆற்றுகை நடைபெற்ற கிராமத்தினரது வீடுகளிலும் வீட்டிற்கு வீடு ஆடிச்செல்வது வழக்கம். இதன்போது அண்ணாவியார் மத்தளம் அடிக்க கூத்தாடிய கூத்தர்கள் தங்களுடைய கூத்துப் பாடல்களை பாடிய படி செல்வார்கள். வீட்டிற்கு சென்றதும் கூத்தில் நடித்த கூத்தருக்கு கண்ணூறு கழிக்கப்படும். கூத்தர் இருக்க அவருக்கு குடை பிடிக்கப்பட்டு அதற்கு மேலாக வெள்ளைச் சீலை போடப்பட்டு அதன் மேலாக சிற்றுண்டிகள் தூவப்பட்டு, ஆராத்தி எடுக்கப்பட்டும்.

இவ்வறு வீட்டிற்கு வீடு ஆடியதனூடாக வீட்டில் தெரியாத சொந்தங்கள், உறவினர்களின் உறவுகள் கிடைத்தது. கூத்துப் பார்க்க வர முடியாதவர்களும் கூத்து வீட்டிலே இருந்து பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன் அண்ணாவியாருக்கும் வருமானம் கிடைத்தது. ஆரம்ப காலத்திலே இவ்வாறான முறை காணப்பட்டது. இதற்குள் கற்றுக்கொள்ளக் கூடிய விடயங்கள் உண்டு என்பதை சிறுவர்களும், கூத்தாற்றுகை இடம்பெற்ற சமூகங்களும் அறிந்தனர்.

**கூத்தரங்கில் ஈடுபட்ட சிறுவர்களில் ஏற்பட்ட ஆளுமை விருத்தி**

கூத்தரங்கானது பல தரப்பட்ட மக்களையும் பாகுபாடின்றி ஒன்றிணைக்கும் கலை வடிவமாகும். இந்த உலகில் காணப்படும் எல்லாச் சிறுவர்களும் ஒரே விதமான சிந்தனை கொண்டவர்கள் அல்ல, ஒவ்வொரு சிறுவர்களும் பல்வேறு எண்ணங்களையும், சிந்தனைகளையும் கொண்டவர்கள் ஆவர். எனவேதான் இவர்களுடன் இணைந்து வேலை செய்யும்போது, கூத்தர்களான சிறுவர்களும், பார்வையாளர்களாக உள்ள சிறுவர்களும் பல நன்மைகளைப் பெறுகின்றனர்.

சிறுவர்கள் “செய்வதனூடாகக் கற்றல்” என்ற விடயத்தினை ஆற்றுகை மையம் சுட்டிக்காட்டியது. கூத்து ஆற்றுகை செயற்பாடானது ஒரு தொடர் செயற்பாட்டினூடாக அளிக்கை செய்யப்படுகின்றது (ஜெயசங்கர், 2011). குறிப்பாக கூத்து பழகுவதற்கு ஆட்கள் சேர்த்தல், சட்டம் கொடுத்தல், அடுக்குப்பார்த்தல், அரங்கேற்றம், வீட்டுக்கு வீடு ஆடுதல் வரை ஆற்றுகை செய்யப்படுகின்றது. இந்த ஒவ்வொரு செயற்பாடும் ஓர் ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றினைச் சிறுவர்கள் நேரடியாகப் பார்த்தும், பங்குபற்றுவதன் மூலமாகவும் எமது சமூகம் சார்ந்த படிப்புக்களை அறிந்து கொள்கின்றனர். இவற்றினை பாடசாலை கல்வி முறையானது கற்றுக்கொடுக்க மாட்டாது. ஆனால்,

பாலோ ஃப்ரையிரே வங்கி மையக் கல்வியை நிராகரித்து ஒடுக்குமுறை அற்ற ஜனநாயகக் கல்வியையும், சுயமாகக் கற்பதையும் மேம்படுத்தியவர் (ஃப்ரையிரே, 2018). இதன் தாக்கத்தை சிறுவர்களை இணைத்து ஆடிய கூத்தாற்றுகையில் காணமுடிந்தது.

பொதுவாக கல்வி பயில்கின்ற மாணவர்களிடம் மனனம் செய்கின்ற ஆளுமையானது அவசியமான ஒன்றாகும். எமது கல்வித்திட்ட முறையானது மாணவர்களிடத்திலும் பாடசாலைகளுக்கு இடையேயும் போட்டித் தன்மையை வளர்க்கும் வகையிலே அமைந்துள்ளமையினை காணமுடிகின்றது. குறிப்பாக தமிழ்த் தின போட்டிகளின்போது பேச்சு போட்டிகள், பாடுதல், பண்ணிசை என்பன மனனம் செய்கின்ற போட்டிகளாகவே காணப்படுகின்றன. இதற்கென விரல் விட்டு எண்ணி மனனம் செய்யக்கூடிய ஒரு சில பிள்ளைகளையே தெரிவு செய்கின்றனர். ஆனால் இம்மாணவர்களே இடையில் மறந்து முழிக்கின்ற நிலையினைக் காணலாம். ஆனால் மிக இலகுவாக மனனம் செய்யக்கூடிய திறமையினை கூத்தரங்கானது வழங்குகின்றது. கூத்தரங்கிலே ஒரு பாத்திரத்திற்கு என வரவு விருத்தம், பாடல், வசனம், ஆடல்களாக பல பாடல்கள் வெவ்வேறான மெட்டுக்களில் காணப்படுகின்றன. இவை அனைத்தையும் குறித்த காலத்திற்குள்ளே அண்ணாவியரின் பயிற்றுவிப்பின் கீழ் எவ்வித பயமும் இன்றி மனனம் செய்து பாடி ஆடுகின்றனர். இவ்வாறு கூத்திலே ஆற்றுகை செய்கின்ற அனைவரையும் இலகுவாகவும், முழுமையாகவும் மனனம் செய்ய வைக்கின்ற வல்லமை கூத்தரங்கு அளிக்கின்றது.

சிறுவர்களிடத்தே குரு மரியாதையினையும், கீழ்ப்படிகின்ற முறையினையும் கற்றுக் கொடுக்கின்றது. கூத்தரங்கிலே அண்ணாவிமாருக்கான மரியாதையானது கூத்துப் பழகின்ற வேளைகளில் கூத்தர்களினால் வழங்கப்படும். அதில், கூத்துப் பயிற்சி முடிவடைந்ததும் அண்ணாவிமார்களது பாதங்களைத் தொட்டு வணங்கி ஆசியைப் பெற்றுக்கொள்வது வழக்கம். இதேபோன்று கூத்துப் பிரதி, தாளம், மத்தளம் ஆகியவற்றினையும் வணங்குவது மரபு ஆகும். அத்துடன் கூத்தாடுகின்ற நிலத்தினையும் மதித்து பூமாதேவியை வணங்குவர். இவ்வாறான விடயங்களை சிறுவர்கள் அவதானித்துக்கொண்டு இவற்றினை செய்வதன்மூலம் நற்பண்புகளை இயல்பாகவே பெற்றுக்கொள்கின்றனர்.

சிறந்த ஒழுக்கப் பண்பு, கூட்டாக செயற்படும் பண்பு, ஒற்றுமை போன்றன இயல்பாகவே வளர்ச்சியடையும். கூத்துப் பழகுதல் தொடக்கம் வீட்டுக்கு வீடு ஆடுகின்ற மரபுவரை அனைவரும் ஒன்றினைத்தே அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும். களரியிலே ஒரு பாத்திரம் கூத்தாடிக் கொண்டிருக்கும் வேளை அனைத்து சிறுவர்களும் சேர்ந்திருந்து தாளக்கட்டுக்களைச் சொல்லுதல், பிற்பாட்டுக்கள் பாடுதல், தாளம் அடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுப்படுவர். அத்துடன் தினமும் கூத்தாட முன்னர் களரிக்கு நீர் தெளிக்கும் வேளை அனைவரும் இணைந்து வேலையில் ஈடுப்படுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களிலே கூட்டாக செயற்படுகின்ற தன்மையினை காணலாம்.

மேலும் களரி கட்டுதல், அலங்கரிக்கின்ற வேளையில் அனைவரும் சேர்ந்திருந்து இதற்குத் தேவையான பொருட்களை சேகரித்து அலங்கரிப்பார்கள். அதனைப் போன்று சதங்கை அணி விழா,

அரங்கேற்றம் நடைபெறுகின்ற வேளைகளில் ஒருவருக்கொருவர் மாறி மாறி புரி கட்டுவதற்கும், சதங்கை கட்டுவதற்கும் உதவுகின்றனர். அண்ணாவியாருக்கும், தங்களுக்கும் தேவையான மலர் மாலைகளைக் கட்டும்போதும் சிறுவர்கள் அயற் கிராமங்களுக்குச் சென்று மலர்கள் பறித்து வருவதும், அதனை சிறியவர்கள் அனைவரும் ஓர் இடத்திலிருந்து கட்டுகின்றமை இடம்பெறும். இவ் வேளைகளில் மாலை கட்டத் தெரியாத சிறுவர்களும் பழகி விடுகின்றனர். இவ்வாறாக ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். இத் தன்மையானது கூட்டாகச் செயற்படும் பண்பு மேலும் வலுப்பெற உதவியாக இருக்கும்.

சிறுவர்களிடையே மறைந்து கிடக்கும் திறமைகளையும் சபைக் கூச்சங்களையும், தயக்கம், பயம், வெட்கம், பதட்டம் போன்ற உணர்வுகளை களைந்தெறிந்து அவர்களை சுதந்திரமாக செயற்பட வைக்கின்ற தன்மை கூத்தரங்கிற்கு உண்டு. கூத்தர்களாய் உள்ள சிறுவர்களை இயல்பாகச் செயற்பட வைத்து அவர்களிடம் உள்ள பலமான விடயங்களைப் பலமடைய செய்யும் ஆற்றல் ஆற்றுகை மைய ஆய்வுக்கு உள்ளது.

இது உளச்சோர்வினை நீக்கி கற்றலில் ஈடுபட வாய்ப்பளிக்கின்றது. கற்பனை வளம், தெளிவான சிந்தனை, படைப்பாற்றல் திறமை என்பன உருவாகும். கலையில் ஆர்வம் ஏற்படும், இரசனை வளர்ச்சியடையும், கல்வியிலும், குணத்திலும் ஆளுமை கொண்ட மனிதர்களாக உருவாகுவதற்கு வழி செய்யும்.

முகாமைத்துவப் பண்பு வளர்ச்சியடைகின்றது. கூத்தரங்கிலயே முகாமைத்துவக் கற்கை இயல்பாகவே பயிற்றுவிக்கப்படுகின்றது. குறிப்பாக கூத்து முகாமையாளர், களரி முகாமையாளர், முதலீட்டு முகாமையாளர் ஆகியோர் செயற்படுகின்றனர். இதற்கு ஒவ்வொருவரும் பொறுப்பாக இருந்து செயற்படுவர். இதனூடாகக் கிடைக்கின்ற அனுபவத்தினூடாக பாடசாலையிலே அல்லது வேறு இடங்களிலே சுயமாகச் செயற்பட உதவியளிக்கின்றது.

தலைமை தாங்கும் பண்பு வளரும், நம்பிக்கை வளர்ச்சியடையும், தன்னைத்தானே உணர்ந்து கொள்ளமுடியும். குறிப்பாக, தங்களையும், தங்கள் திறமைகளையும் அறிந்து கொள்ள முடியும். தனது இயலும், இயலாமையினை அதற்கேற்ப அறிந்து செயற்பட வைக்கும்.

உளப்பிரச்சினையில் இருக்கின்ற சிறுவர்களுக்கு அதிலிருந்து விடுபட வாய்ப்பளிக்கப்படும், உண்மையான மகிழ்ச்சி, நகைச்சுவை என்பன இயல்பாகவே தோன்றும். தனது பழமை, புதுமை, பாரம்பரியம், பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றினை அழியாது பார்த்தல் வேண்டும் எனும் உணர்வினைத் தூண்டவும் ஆற்றுகை மையம் உதவுகின்றது. ரிச்சர்ட் செக்னர் சுற்றுச்சுழல் அரங்கில் ஒருவருக்கொருவர் ஊடாடி, மகிழ்ந்து சடங்கு நிலைப்பட்டு ஆற்றலை வளர்ப்பது நிலவும் என்கிறார் (Schechner, 1994). இப்போக்கினை ஆற்றுகை மைய அரங்க முன்னெடுப்பிலும் வலுவாகக் காணலாம்.

வெவ்வேறு வயதினை உடைய சிறுவர்கள் கூத்தில் பங்கு பற்றுவதனால் ஒவ்வொருவரையும் புரிந்து கொண்டு சிறுவர்கள் செயற்பட முடிகின்றது. இங்கே ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு ஏற்படுகின்றது. அத்துடன் விட்டுக்கொடுப்பு, பிரச்சினையை தாங்களாகவே சமாளிக்கும் தன்மை, பொறுமை,

சகிப்புத்தன்மை, அவதானம் போன்ற ஒழுக்கப்பண்புகள் மேற்கிளம்புகின்றன. கூத்தரங்கு மூலமாக கல்வியிலும், குணத்திலும் ஆளுமை கொண்டவர்களாக இருப்பதற்கு வழி செய்கின்றது.

இவ்வாறாக ஆற்றுகை நிலையில் சிறுவர்கள் நுகர்வோர் எனும் நிலையினை விடுத்து பல வகையில் செயற்பாட்டாளர்களாக உள்ளனர். இதனால் பல நன்மைகளையும், மாற்றங்களையும் இளவயதினர் பெற்றுக்கொள்கின்றனர். இவை எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்வில் ஒளிமயமாக மாறும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

**முடிவுரை**

சிறுவர் கூத்தரங்கானது இன்றைய காலத்துக்கு தேவையானதாகவும், மிகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றமை ஆய்வில் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் பாரம்பரியமான முறையில் கூத்து ஆடப்பட்டு வந்த வெருகல் பிரதேச மக்கள் யுத்தம், இயற்கையனர்த்தம், இடப்பெயர்வு, பொருளாதாரப் பிரச்சினை காரணமாக கூத்தாற்றுகையினை பாரம்பரியமான முறையில் முன்னெடுப்பது குறைவாக காணப்படுகின்றது. இச்சமூகத்தினர் கூத்தாற்றுகையினை மீண்டும் கொண்டுவர வேண்டும் என ஆய்வாளர் முடிவெடுத்து இன்றைய சிறுவர்களை வைத்து கூத்தாற்றுகையினை மேற்கொள்வதன் மூலம்; பெரியவர்களுக்கும் விருப்பத்தைக் கொண்டு வரும் நோக்கில் வனராணி வடமோடி சிறுவர் கூத்தாற்றுகை மேற்கொள்ளப்பட்டது. சிறுவர்கள் தாங்களாகவே எதிர்காலத்தில் கூத்தினை ஆடுவதற்கு வழிவகுத்து கொடுப்பதுடன் பெரியவர்கள் இதற்கு உறுதுணையாகவும், அவர்களும் இதனை தொடர வேண்டும் என்பதும் முக்கியமான விடயமாகும்.

சிறுவர் கூத்தரங்கை மையப்படுத்திய ஆய்வில் இப்பிரதேசத்தின் வரலாறும், அதன் சமூக அமைப்பும் அதனோடு இணைந்த கலைகள் என்பவற்றுடன் பாரம்பரிய கூத்தரங்கு, சிறுவர் கூத்தரங்கின் ஆற்றுகை அழகியல், ஆய்வாளரின் ஆற்றுகை மையக் கற்றல், கற்பித்தலின் அடைவு மற்றும் அதனை பிரயோகப்படுத்தும் நோக்கில் வெருகல் கல்லடி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட வனராணி வடமோடி சிறுவர் கூத்தின் சட்டம் கொடுத்தல், சதங்கை அணி விழா, அரங்கேற்றம், வீட்டுக்கு வீடு ஆடுதல் போன்றனவும் ஆய்வில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுச் செயற்பாட்டில் பாரம்பரிய முறைப்படி கூத்தரங்க செயற்பாடு இடம் பெற்றதால் இப்பிரதேசத்தில் காணப்படும் இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் அடுத்த கட்டத்திற்கு கூத்தாற்றுகையினை கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் உள்ளாக்கப்பட்டனர்.

பன்மைத்துவம் வாய்ந்;த சிறுவர் கூத்தாற்றுகை அனுபவம் வாய்ந்த அண்ணாவிமார்களுடன் இணைந்து இன்றைய சிறுவர்களைக் கொண்டு முன்னெடுக்கையில் பாரம்பரிய கூத்துப் பற்றிய அறிவும் இதனை செயற்பாட்டினூடாக செய்து பிழை விட்டு, திரும்பச் செய்து கற்றல், கூடிக் கற்றல், சவால்களை எதிர் கொண்டு பிரச்சினையை விடுவிக்கவும், பிரச்சினையிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும், கற்றல்,

தலைமைக்குப் பணியக் கற்று தலைமை தாங்கக் கற்றுக் கொள்ளவும், பொது நலனுக்காக கூடிக் கற்கும்போது சுயநலத்ததை முன்னிறுத்தாது இருக்கக் கற்றுக் கொள்ளவும், என உலக மயமாக்கல் தன்மைக்குள் சிக்கி விடாது கூத்தரங்கின் முக்கியத்துவத்தினைப் புரிந்து அதனைப் பயன் படுத்துபவர்களாகவும் காணப்படுவார்.

சிறுவர் கூத்தரங்கு செயற்பாட்டு முறைப்படி இடம் பெற்றபோது மதம், சமயம், சாதி என்றரீதியில் தனிமையில் இறுக்கமான நிலையில் காணப்பட்ட சிறுவர்கள், சமூகத்தினர் உள நெருக்கடியில் இருந்து விடுபட்டு அனைவரும் கூடிக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

கூத்தரங்கானது வெறுமனே ஆற்றுகையில் பங்கு பற்றி அரங்கேற்றத்துடன் நின்று விடாமல் ஒரு தொடர் செயற்பாடாகப் பயணித்து அதனூடாகப் பல படிப்பினைகளை சிறுவர்களுக்கும், அவர்களின் சமூகம் சார்ந்தவர்களுக்கும் கொடுத்திருந்தது. சமூகத்துடன் இணைந்து செயற்படுவது, ஆற்றுகை சார்ந்த விடயங்களுக்கு உதவியினைப் பெற்றுக் கொள்ளுதல், அவர்களை செயற்பட வைத்தல், அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், ஆய்வாளரின் கருத்தை அவர்களுடன் பகிர்ந்து செயற்பட வைத்தல் போன்ற விடயங்களுக்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என்கின்ற விடயங்களினை அனுபவங்களினூடாக கற்றுக் கொள்ள முடிந்தது.

மறுக்கப்பட்டிருக்கிருக்கின்ற அடுத்த தலைமுறையினருக்கான கற்றலை, பாரம்பரிய கலையினை, இன்றைய தலைமுறையினருக்கும், எதிர்காலத் தலைமுறையினருக்கும் சிறுவர் கூத்தாற்றுகை செயற்பாடடினூடாக கொண்டு வரப்பட்டது.

சிறுவர்கள் கூடிச் செயற்பட்டு தங்களின் திறமையினை சமூகத்தின் முன் வெளிப்படுத்தினர். இதனைக் கண்ணுற்ற மக்கள், சமூகத்தவர் சிறுவர்களுக்கு வாழ்த்தி உற்சாகப்படுத்தியதோடு தாங்களும் அடுத்தடுத்த வருடங்களில் கூத்தாடுவதற்கு முடிவெடுத்தனர்.

கூத்தரங்க செயற்பாடானது ஒரு தொடர் செயற்பாடாக காணப்பட்டமையினால் பல படிப்பினையை சமூகத்தவர்களுக்கு கொடுத்தது. கூத்தாற்றுகையினை இதுவரை பாரத்;திராத சிறுவர்கள் சுய விருப்புடன் இணைந்து செயற்பட்டதுடன் அதனைப் பார்த்த சிறுவர்கள், பங்கு கொண்ட சிறுவர்களும் கூத்தாற்றுகையினை தங்களுக்கு தொடர்ச்சியாக நிகழ்த்தும்படி வேண்டிக் கொள்கின்றனர். எனவே இவ் ஆய்வுச் செயற்பாட்டை வைத்துப் பார்க்கின்றபோது. பாரம்பரியமாக கூத்து ஆடப்பட்டு வந்த பிரதேசங்களில் கூத்து விடுபட்டும், நிகழ்த்;துவது குறைவடைந்தும் காணப்படுவதை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில் சிறுவர் கூத்தரங்கினை முன்னெடுப்பதனூடாக விருப்பத்துடனும், சிறந்த வலுப்படுத்தலுடனும் மீண்டும் பாரம்பரிய கூத்தாற்றுகையினை முன்னெடுப்பதற்கு சிறுவர் கூத்தரங்கு முன்னுதாரணமாகவும், முழுமையான செயற்பாடாகவும் காணப்படுகின்றது.

**உசாத்துணைகள்**

**தமிழ் நூல்கள்**

1. மௌனகுரு.சி, (2005). நாடக அரங்கியல் பழையதும் புதியதும், கொழும்பு குமரன் பதிப்பகம். கொழும்பு. இலங்கை.

2. பாலசுகுமார், திருமலைநவம், சிவபாலன், (1994). திருகோணமலைப் பிரதேசத்தின் நாடக அரங்கப் பாரம்பரியம், அனாமிகா வெளியீடு. மட்டக்களப்பு. இலங்கை.
3. வெருகல் பிரதேச செயலக கலாசார அதிகாரசபை, (2016). வெருகல் கலசம். இலங்கை.
4. தங்கேஸ்வரி,க. (2007). மட்டக்களப்பு கலைவளம். மணிமேகலை பிரசுரம். தமிழ்நாடு.
5. ஜெயசங்கர், சி. (2011). கூத்து மீளுருவாக்கம் ஈழக் கூத்தின் புதிய பரிமாணங்கள். கருத்து = பட்டறை. தமிழ்நாடு.
6. ஃப்ரையிரே, பா. (2018). ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான கல்வி முறை. பாரதி புத்தகாலயம். சென்னை.

**English Books**

1. Boal, A. (1992). Games for actors and non – actors. Routledge. London. First Edition.
2. Boal, A. (2006). The Aesthetics of the Oppressed. (Translation) Adrian Jakson. Routledge. London and New York. First Edition.
3. Schechner, R. (1994). Environmental Theatre. New York– London. First Edition.


**நேர்காணல்**

ஆய்வுக்கான முதல் நிலைத் தரவான நேர்காணலில் நேர்கண்டவரின் பெயர், தொழில், இடம், வயது பெற்றுக்கொண்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.

01. வெற்றிவேல்.மா, அண்ணாவியார், இலங்கைத்துறைத் முகத்துவாரம், வயது - 67, 05.05.2019.
02. தெய்வேந்திரம்.க, கலைஞர், வாழைத்தோட்டம், வயது - 66, 30.07.2019.
03. தயாபரன்.க, அண்ணாவியார், புன்னையடி, வயது - 43, 31.07.2019.
04. சிவநாயகம்.செ, ஏட்டண்ணாவியார், சீலாமுனை, வயது - 71, 2019.08.06.
05. ஞானசேகரம்.சி, அண்ணாவியார், சீலாமுனை, வயது - 63, 2019.08.06, 2019.09.01.
06. முத்துலிங்கம்.த, கொப்பி ஆசிரியர், புன்னைச்சோலை, வயது - 63, 2019.08.06, 2019.09.01.
07. சிவானந்தம்.வே, மலைநீலியம்மன் கோயில் தலைவர், கல்லடி, வயது - 48, 03.09.2019.
08. சுப்பிரமணியம்.இ, பெரிய தெய்வ ஆலயப் பூசகர், கல்லடி, வயது - 57, 04.09.2019.
09. துரைநாயகம்.இ, கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர், கல்லடி, வயது - 48, 05.09.2019.
10. மனோகரஞ்சன்.க, பாடசாலைச் சங்கத்தலைவர், கல்லடி, வயது - 60, 05.09.2019.


**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

**Copyright Holder:**
© Author(s) (2026).

**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**